# இந்திய உயர் ஸ்தானிகராலயம்
# கொழும்பு

## ஊடக அறிக்கை

## <u>இலங்கை உயர் நீதிமன்ற பதிவாளர்களுக்காக</u><br><u>இந்திய உச்ச நீதிமன்றம் ஒழுங்கமைத்த பயிற்சித் திட்டம்</u>

இந்திய உச்ச நீதிமன்றத்தில் 09 மே முதல் 13 மே வரையில் ஒழுங்கமைக்கப்பட்டிருந்த நான்கு நாள் பயிற்சித் திட்டத்தினை இலங்கை உயர் நீதிமன்றத்தின் 15 அதிகாரிகளைக் கொண்ட குழுவினர் வெற்றிகரமாக நிறைவு செய்துள்ளனர்.

2. இ-நீதிமன்ற திட்டம், நூலகம், தாக்கல் செய்தல், பட்டியலிடல் ஆய்வு செய்தல், ஸ்கான் செய்தல் மற்றும் பதிவு செய்தல் போன்ற நீதிமன்ற நடைமுறைகள் உள்ளிட்ட இந்திய உச்ச நீதிமன்றத்தின் தொழில்நுட்ப மற்றும் டிஜிட்டல் மாற்றங்கள் குறித்து இலங்கை அதிகாரிகளுக்கு இப்பயிற்சியின்போது அறிமுகம் செய்துவைக்கப்பட்டது. சிரேஸ்ட பதிவாளர்கள் பதிவேடுகள் குறித்து பிரதிநிதிகளுக்கு அதன் நுணுக்கங்களை விளக்கமளித்ததுடன் மேம்பட்ட வெளிப்படைத்தன்மை, செயல்திறன் மற்றும் இலகுவான அணுகல் முறைமைகள் தொடர்பாகவும் தெளிவூட்டப்பட்டது.

3. இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையிலான தொழில்நுட்ப கண்டுபிடிப்புகள் மற்றும் நீதித்துறை நிபுணத்துவம் ஆகியவற்றுக்கான வலுவான இருதரப்பு உறவு மற்றும் பரஸ்பர ஈடுபாட்டுக்கான ஒரு சான்றாக இது அமைகின்றது. கௌரவ இந்திய பிரதம நீதியரசர் அவர்களது வழிகாட்டல்களின் கீழான உச்ச நீதிமன்றத்தின் பயிற்சிப் பிரிவானது இந்த முயற்சிகளுக்கு ஆதரவாக அமைவதுடன் அறிவு பகிர்வினை மேம்படுத்தும் அதேவேளை, சர்வதேச நீதித்துறை அமைப்புகளுடனான ஒத்துழைப்பினையும் வலுவாக்குகின்றது.

*********************

**கொழும்பு**
**15 மே 2024**

**Source: https://www.sci.gov.in/supreme-court-of-india-organizes-training-programme-for-registry-officials-of-supreme-court-of-sri-lanka/#:~:text=of%20Sri%20Lanka-,Supreme%20Court%20of%20India%20organises%20Training%20Programme%20for%20Registry,Supreme%20Court%20of%20Sri%20Lanka&text=A%20delegation%20consisting%20of%2015,the%20Supreme%20Court%20of%20India.**